**விதிமுறைகள்**

- போட்டியில் பங்கேற்க நுழைவுக் கட்டணம் கிடையாது.
- 9 முதல் 12-ஆம் வகுப்புகளில் பயிலும் பள்ளி மாணவர்கள், கல்லூரி மாணவர்கள் மற்றும் ஆர்வமுள்ள ஓவியர்கள் இப்போட்டியில் பங்கேற்கலாம்.
- www.tamilvu.org என்ற இணைய தளத்தில் பதிவுப் படிவத்தை முறையாகப் பூர்த்தி செய்தல் வேண்டும்.
- சங்க இலக்கியப் பாடல்கள், அதற்கான விளக்கம் மற்றும் ஓவியத்திற்கான சில குறிப்புகள் தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் இணையதளத்தில் வழங்கப்படும்.
- ஒரு மின்னஞ்சல் முகவரி மூலம் ஒரு பாடலை மட்டுமே தேர்ந்தெடுக்க இயலும்.
- போட்டியாளர்கள் தாங்கள் **தேர்வு செய்யும் பாடலின் பொருளை மையமாகக் கொண்டு** தெளிவாக ஓவியம் வரைந்து மேலே குறிப்பிடப்பட்டுள்ள இணைய தளத்தில் பதிவு செய்த 10 நாட்களுக்குள் பதிவேற்றம் செய்ய வேண்டும்.
- த.இ.கவின் இணையதளத்தில் போட்டிக்கான பதிவு இணைப்பு 16.11.2023 முதல் 27.11.2023 வரை செயல்பாட்டில் இருக்கும்.
- 27.11.2023 அன்று பதிவு செய்வோர் 06.12.2023 அன்று மாலை 6.00 மணிக்குள் ஓவியங்களைப் பதிவேற்றம் செய்ய வேண்டும்.
- ஓவியத்தின் அசலை (Original) 09.12.2023 க்குள் விரைவு அஞ்சல் அல்லது தூதஞ்சல் (Courier) மூலம் அனுப்ப வேண்டும்.
- சிறந்த ஓவியங்களுக்கு பள்ளி மாணவர்கள், கல்லூரி மாணவர்கள் மற்றும் ஓவியர்கள் என்ற பிரிவுகளில் தலா மூன்று பரிசுகள் மற்றும் சான்றிதழ் வழங்கப்படும்.

  முதல் பரிசு – ரூ. 25,000
  இரண்டாம் பரிசு – ரூ. 15,000
  மூன்றாம் பரிசு – ரூ. 9,000

  (ரூ.10,000 க்கு மேற்பட்ட பரிசுத்தொகையில் 30%, வரிப் பிடித்தம் செய்யப்படும்.)

- போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கான பரிசுத்தொகை வங்கிக்கணக்கில் மின்னணுப் பணப் பரிவர்த்தனை மூலமாகச் செலுத்தப்படும்.
- வங்கிக் கணக்கு இல்லாதவர்கள் தங்களால் கடிதம் மூலம் பரிந்துரைக்கப்படும் நபரின் வங்கிக் கணக்கில் மின்னணுப் பணப் பரிவர்த்தனை மூலம் பரிசுத்தொகை செலுத்தப்படும்.
- தேர்ந்தெடுக்கப்படும் இதர ஓவியங்களுக்கு ஊக்கத் தொகையாக ரூ.2,000 (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) மற்றும் மின்சான்றிதழ் வழங்கப்படும்.
- தேர்ந்தெடுக்கப்படும் அனைத்து ஓவியங்களையும், தமிழ் இணையக் கல்விக்கழகம் சங்க இலக்கிய நாட்காட்டி உருவாக்கத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளும்.

- ஓவியங்களைத் திருப்பி அனுப்ப இயலாது.
- தமிழ் இணையக் கல்விக்கழக நடுவர் குழுவின் முடிவு இறுதியானது.
- மேலும் விவரங்களுக்குத் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: **இயக்குநர், தமிழ் இணையக் கல்விக்கழகம், கோட்டூர், சென்னை – 25.** தொலைபேசி எண் : 044–2220 9400, +91 86678 22210. மின்னஞ்சல் : tpktva@gmail.com

**<u>ஓவியம் வரைவதற்கான விதிமுறைகள்</u>**

- **தேர்வு செய்யப்பட்ட பாடலின் பொருளை அடிப்படையாகக் கொண்டு மட்டுமே ஓவியங்களைத் தெளிவாக வரைய வேண்டும்.** வேறு ஏதேனும் பாடலுக்கு ஓவியங்கள் வரைந்தால் அவ்வோவியங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
- 13" x 13" அளவில் வண்ண ஓவியங்களாக மட்டுமே வரைந்து அனுப்ப வேண்டும். (Water Colour / Acrylic / Poster / Oil Painting)
- ஓவியங்களைப் பதிவேற்றம் செய்யும்போது (10MBக்கு மிகாமல்) JPEG/JPG/PNG வடிவில் கோப்பிற்கு **"ஓவியர் பெயர்_பாடல் எண்"** (எ.கா. XXXX_நற்றிணை10) எனப் பெயரிட வேண்டும்.
- ஓவியங்கள் முழுமையாக பதிவேற்றம் செய்யப்பட்டவுடன் தங்களுக்கான குறியீட்டு எண் (Reference Number) கணினியால் வழங்கப்படும்.
- ஓவியத்தை மடிக்காமலும், சேதப்படுத்தாமலும், சுய விவரக் குறிப்பு, கணினியால் வழங்கப்பட்ட குறியீட்டு எண் (Reference Number) மற்றும் தேர்வு செய்த பாடலைத் தனித் தாளிலும் எழுதி, ஒரே உறையில் வைத்து பாதுகாப்பான முறையில் **இயக்குநர், தமிழ் இணையக் கல்விக்கழகம், கோட்டூர், சென்னை – 25**. விரைவு அஞ்சலிலோ, தூதஞ்சலிலோ, (Courier) அல்லது நேரிலோ **இயக்குநர், தமிழ் இணையக் கல்விக்கழகம், கோட்டூர், சென்னை – 25**. என்ற முகவரிக்கு உறையின் மேல் **சங்க இலக்கிய – ஓவியப்போட்டி** என்று குறிப்பிட்டு அனுப்பி வைக்கவேண்டும். அஞ்சல் வந்தடைய வேண்டிய கடைசி நாள்: 09.12.2023

| | |
|---|---|
| பெயர் | |
| மின்னஞ்சல் முகவரி | |
| தொலைபேசி எண் | |
| பாடல் எண் | |
| கணினியால் வழங்கப்பட்ட பதிவேற்றக் குறியீட்டு எண் | |